Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935



# 1 முதல் 12ம் வகுப்பு வரை தமிழகத்தில் ஜூன் 6ஆந்தேதி பள்ளிகள் திறப்பு. பள்ளி கல்வித்துறை அறிவிப்பு

# பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைத்து பள்ளிகளுக்கும் மகளிர் குழுக்கள் மூலம் சீருடை தயாரிக்க முடிவு

சென்னை, 24 மே 2024: கோடை விடுமுறை முடிந்து, தமிழகத்தில் 1 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஜூன் 6ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

மேலும், பள்ளிகளை திறக்க தேவையான ஏற்பாடுகளை செய்யவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 10, 11, 12-ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு மார்ச் 1 முதல் ஏப்ரல் 8-ம் தேதி வரை நடத்தப்பட்டது. அதேபோல், இந்தாண்டு நாடாளுமன்ற தேர்தலும் வந்ததால் இதர வகுப்புகளுக்கும் வழக்கத்தைவிட முன்கூட்டியே ஆண்டு இறுதித் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டன.

அதைத்தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு ஏப்ரல் 24 ந்தேதி முதல் கோடை விடுமுறை விடப்பட்டது. மேலும், நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு இந்தாண்டு கூடுதலாக கிடைத்துள்ள விடுமுறை நாட்களை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கழித்து வருகின்றனர்.

வழக்கமாக பள்ளி மாணவர்களுக்கு மே மாதத்தில் கோடை விடுமுறை விடப்பட்டு, ஜூன் மாத தொடக்கத்தில் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும். ஆனால், இந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் ஜூன் 4-ம் தேதி வெளியாவதால் பள்ளிகள் எப்போது திறக்கப்படும் என்று பெற்றோர்கள் எதிர்பார்த்திருந்தனர்.




மேலும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கோடை வெயில் வாட்டி வரும் நிலையில் பள்ளிகள் எப்போது திறக்கப்படும் என்ற கேள்வியும் எழுந்தது.

இந்த நிலையில் பள்ளிகள் திறப்பு தொடர்பாக நேற்று சென்னையில் பள்ளிக் கல்வித்துறை உயர் அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆலோசனை மேற்கொண்டார்.

இந்நிலையில் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ஜூன் 6ம் தேதி பள்ளிகள் திறந்து அன்றைய தினமே 2024 25ம் ஆண்டுக்கான வகுப்புகள் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நாளில் பள்ளிகளை துவங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர். அனைத்து பள்ளிகளை திறப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடன் எடுத்திடவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது என பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

பள்ளிகள் திறக்கப்படும் முதல் நாளிலேயே மாணவ-மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள், நோட்டுகள் வழங்கும் வகையில் அதற்கான பணிகளில் கல்வித்துறை முழுவீச்சில் இறங்கியுள்ளது.

பள்ளிகளுக்கு பாடப்புத்தகங்களை வரும் 31 ந்தேதிக்குள் வழங்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் சீருடைகளை தயாரிக்க, தையல் பணிகளை மேற்கொள்ள மகளிர் குழுக்களுக்கு அனுமதி வழங்க பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல்கட்டமாக சோதனை அடிப்படையில் 50 பள்ளிகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதன்பின்னர் அனைத்து பள்ளிகளுக்கும் மகளிர் குழுக்கள் மூலம் சீருடை தயாரிக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் கூகுள் செல்போன் தொழிற்சாலை: ஸ்டாலினை விரைவில் சந்திக்கும் அதிகாரிகள்




சென்னை, 24 மே 2024: கூகுள் நிறுவனத்தின் பிக்சல் செல்போன் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் முதல் முறையாக அமைகிறது.

இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கூகுள் நிறுவன அதிகாரிகள் விரைவில் சென்னையில் சந்திக்கிறார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், 2030-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்து.

அந்த இலக்கை எய்தும் வகையில் தமிழ்நாட்டிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், அரபுநாடுகள், பிரான்ஸ் ஆகிய வெளிநாடுகளிலும், முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி அதன் மூலம் ரூ. 9 லட்சத்து 61 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார். அவற்றின் பயனாக தமிழ்நாட்டில் 30 லட்சம் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுக்கப் பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக




முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு உலகப் புகழ் பெற்ற கூகுள் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு பாக்ஸ்கான் நிறுவன அதிகாரிகளுடன் சென்று தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக, கூகுள் நிறுவன அதிகாரிகள் தமிழ்நாட்டில் பாக்ஸ்கான் நிறுவனத்துடன் இணைந்து கூகுள் பிக்சல் செல்போன் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ளார்கள். இது தொடர்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்திப்பதற்கு கூகுள் நிறுவன அதிகாரிகள் விரைவில் சென்னை வர உள்ளனர். இதன் மூலம் சென்னைக்கு அருகில் கூகுள் பிக்சல் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாகும் பிரகாசமான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்கல்வி பெற்றுள்ள தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

# வீட்டுக்கடன் வழங்கலில் முன்னணி நிறுவனமான ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் - ன் வரிக்குப் பிந்தைய இலாபம் முந்தைய ஆண்டை விட 32% உயர்வு!

சென்னை, 24 மே 2024: ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஐ ஐ எஃப் எல் எச் எஃப் எல்) -ன் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்து 23 ஆம் நிதியாண்டு 23-ல் இருந்த ரூ. 28,512 கோடியிலிருந்து, 25% வளர்ச்சியுடன் நிதியாண்டு 24-ல் ரூ.35,499 கோடியாக உயர்ந்துள்ளது, ரூ. 14.26 இலட்சம் என்ற சராசரி டிக்கெட் அளவுடன் இந்தியாவின் மிகப்பெரிய எளிய வீட்டுக்கடன் வழங்கும் நிறுவனமாக இதன்மூலம் ஐ ஐ எஃப் எல் எச் எஃப் எல் உருவெடுத்திருக்கிறது. 2024, மே 6 அன்று பங்குச் சந்தைகளுக்கு அளித்த தகவலளிப்பின் அடிப்படையில், அபுதாபி இன்வெஸ்ட்மென்ட் அத்தாரிட்டீஸ் 20% -க்கும் அதிகமான பங்கினை கொண்டிருக்கும் இந்நிறுவனமானது, இயக்க செயல்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய் நிதியாண்டு 24-ல் ரூ. 33,17 கோடியாக, முந்தைய ஆண்டின் அளவான ரூ. 2,712 கோடியிலிருந்து 23% வளர்ச்சியினை பதிவு செய்திருக்கிறது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், வரிக்குப் பிந்தைய லாபம் 32% வளர்ச்சியுடன் ரூ.1,017 கோடியாக உயர்ந்திருக்கிறது. 80 பி பி எஸ் மேம்பாட்டைக் கண்டிருக்கும் என் ஐ எம், நிதியாண்டு 23-ல் இருந்த 6.5% என்பதிலிருந்து, எஃப் ஒய் 24-ல் 7.3% ஆக வலுவடைந்திருக்கிறது. மூலதன போதுமான விகிதம் 42.7% ஆக இருக்கிறது. மொத்த வராக்கடன்களும் 60 பி பி எஸ் மேம்பாட்டை பதிவு செய்திருக்கின்றன. நிதியாண்டு 23-ல் 2.1% ஆக இருந்த இது, நிதியாண்டு 24-ல் 1.5 % ஆக குறைந்திருக்கிறது. இந்நாட்டில் மலிவு விலை வீடுகளுக்கு நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் வருவாய்க்கான செலவில் மிகக் குறைந்த விகிதத்தை இந்நிறுவனம் பெற்றிருக்கிறது. பெருமிதப்படக்கூடிய நிதிசார் முடிவுகள் குறித்து ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் - ன் செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மோனு ராத்ரா கூறியதாவது: "பொருளாதார ரீதியில் பலவீனமான பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு கட்டுபடியாகக்கூடிய வீட்டுக் கடன்கள் வழங்குவதில் ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் தொடர்ந்து பொறுப்புறுதி கொண்டிருக்கிறது. குறிப்பாக, முதல் முறையாக வீடுகளை வாங்குபவர்கள் மற்றும் பெண் கடன்தாரர்கள் / இணை கடன்தாரர்களான பெண்களுக்கு இது முன்னுரிமை அளிக்கிறது. இந்தியாவின் அடமான கடன் வழங்கல் பிரிவில் வலுவான கட்டமைப்பை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். இயக்க ரீதியிலான செயல்நேர்த்தி மற்றும் தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் தீர்வுகள் மீதான எமது கூர்நோக்கம் மேலாண்மையின் கீழ் உள்ள சொத்துகளில் வளர்ச்சியுடன், என் ஐ எம் -களில் வளர்ச்சி, கடன் வழங்கலுக்கான செலவு குறைப்பு ஆகியவற்றையும் சாத்தியமாக்கியிருக்கிறது. இதன்மூலம் சிறப்பான லாப நிலை எட்டப்பட்டிருப்பதோடு , எங்கள் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களையும் எங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறது. எமது நிறுவனத்தின் மீதும், அதன் திட்டங்கள் மீதும் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் ஆழமான நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் செயல்பாட்டில் உள்ள வாடிக்கையாளர் எண்ணிக்கை 202885 லிருந்து 281514 ஆக அதிகரித்திருக்கிறது.

ஏ டி ஐ ஏ போன்ற முதலீட்டாளர்கள் மற்றும் டி எஃப் சி, ஐ எஃப் சி மற்றும் ஏ டி பி போன்ற டி எஃப் ஐ -களின் ஆதரவை பெற்றிருப்பது எங்களுக்கு கிடைத்திருக்கும் கௌரவமாகும். எங்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையே இதற்கு காரணம். மேலாண்மையின் கீழ் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2,000 கோடி என இருந்த நிலையில், 10 ஆண்டுகளுக்குள் ரூ. 35,499 கோடிகள் என்ற பெருவளர்ச்சியை நாங்கள் பதிவு செய்திருக்கிறோம். இதுவரை தேவையை விட குறைவான சேவை வழங்கப்பட்ட பிரிவுகள் மீது கவனம் செலுத்துவதில் எமது பொறுப்புறுதியை இது பிரதிபலிக்கிறது. எமது நிதிசார் செயல்பாடு இத்தொழில்துறையில் மிகச்சிறந்தவற்றுள் ஒன்றாக இருக்கிறது. அடுத்த 3 ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டை விட எமது ஏ யூ எம் சராசரியாக 20% வளர்ச்சியினை பதிவு செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்.. பிஜிட்டல் செயல்பாடுகளின் வலுவான செயல்திறன் இதற்கு காரணமாக இருக்கும்." ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் - ன் தென் மண்டல விற்பனை பிரிவு தலைவர் கிராந்த் நமலா பேசுகையில், "எமது பிஜிட்டல் செயல்திறன்களை பயன்படுத்தி, எமது செயற்பரப்பை வரும் ஆண்டுகளில் விரிவுபடுத்த நாங்கள் திட்டமிட்டிருக்கும் நிலையில், நாங்கள் தற்போது இயங்கி வரும் 17 மாநிலங்களில் அதிக கூர்நோக்கம் செலுத்துகிறோம். அடுக்கு 3 மற்றும் 4 சந்தைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பிரத்யேகமான வாடிக்கையாளர் அனுபவத்தை சாத்தியமாக்கும் வகையில் தனிப்பயனுடன் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப செயல்முறையை கட்டமைக்க எங்களுக்கு உதவும் வகையில், தொழில்நுட்ப செயல் நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இதன்மூலம் கடனுக்கு ஒப்புதல் வழங்கும் நேரம் மிகவும் குறையும். நிதியாண்டு 24-ல், அனைவருக்கும் குடியிருக்க வீடு என்ற பிரதமரின் கனமைாண்புமிகுவ செயல்படுத்த, ஆந்திரபிரதேஷ் மாநிலத்தில் மட்டும் பி எம் ஏ ஒய் திட்டத்தின் கீழ் பயனாளிகளால் முன்னெடுக்கப்படும் கட்டுமானப்பணி வீடுகளுக்காக 23,000 -க்கும் அதிகமான பயனாளிகளுக்கு வீட்டுக் கடன்களை நாங்கள் வழங்கியிருக்கிறோம். நிதியாண்டு 25-ல், ஆந்திரபிரதேஷ், தெலங்கானா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் 170 கிளைகளை கொண்ட எமது வலுவான வலையமைப்பின் மூலம் 68,500-க்கும் அதிகமான புதிய வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இவர்களில் பெரும்பாலானோர் முதன் முறையாக வீடுகளை வாங்குபவர்களாக இருப்பார்கள்." என்று கூறினார். நிலைப்புத்தன்மையுள்ள வீட்டு வசதி நடைமுறைகளின் சேம்பியனாக திகழும் ஐ ஐ எஃப் எல் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், யுஎஸ் இன்டர்நேஷனல் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் (டி எஃப் சி) போன்ற டி எஃப் ஐ -களிடமிருந்து நிதியாண்டு 23-24-ல் $ 450 மில்லியனுக்கும் அதிகமான மொத்த நிதியளிப்பை பெற்றிருக்கிறது. குறைந்த வருவாய் உள்ள மற்றும் பொருளாதார ரீதியில் பலவீனமான பிரிவினருக்கு மலிவு விலையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை வீடு கட்டுமானத்திற்கு ஆதரவளிக்க இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. நிதிசார் உள்ளடக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக பொறுப்புறுதி ஆகியவற்றை ஊக்குவித்து வரும் ஐ ஐ எஃப் எல் எச் எஃப் எல், முன்னணி வீட்டுவசதிக்கான நிதி நிறுவனமாக திகழ்வதுடன், அனைவருக்கும் வீடு என்ற அரசின் கனவை நிஜமாக்கவும் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகிறது.

# முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸ் கைது




சென்னை, 24 மே 2024: சென்னை அருகே கேளம்பாக்கத்தில் ஐஏஎஸ் அதிகாரி பீலாவின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தகராறு செய்த வழக்கில் முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸை போலீஸார் கைது செய்தனர்.

ராஜேஷ் தாஸின் மனைவியும், தமிழக எரிசக்தித் துறைச் செயலருமான ஐஏஎஸ் அதிகாரி பீலா, ராஜேஷ் தாஸைவிட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார். சென்னை அருகே தையூரில் பீலாவுக்கு பங்களாவுடன் கூடிய பண்ணை உள்ளது. அந்த வீட்டில் பணியாளர்களும், காவலாளிகளும் மட்டும் தற்போது உள்ளனர். பீலா சென்னையில் உள்ள வீட்டில் வசிக்கிறார்.

இந்நிலையில், கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் பீலா ஒரு புகார் அளித்தார். அதில், ராஜேஷ் தாஸ் கடந்த 18-ஆம் தேதி தனது நண்பர்கள் சிலருடன் தையூரில் உள்ள வீட்டில் காவலாளியை கீழே தள்ளிவிட்டு அத்துமீறி நுழைந்ததாகவும், காவலாளியின் கைப்பேசியைப் பறித்து மிரட்டியதாகவும் கூறியுள்ளார். அதன் அடிப்படையில் ராஜேஷ் தாஸ் மீது கேளம்பாக்கம் போலீசா மூன்று பிரிவுகளில் வழக்குப் பதிந்து விசாரித்து வந்தனர்.

இந்த நிலையில், கேளம்பாக்கத்தில் ஐஏஎஸ் அதிகாரி பீலாவின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தகராறு செய்த வழக்கில் முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸை பனையூரில் உள்ள வீட்டில் வைத்து கேளம்பாக்கம் போலீசார் கைது செய்தனர். கொலை மிரட்டல், சட்ட விரோதமாக கூடுதல், தாக்குதல் உள்ளிட்ட 5 பிரிவுகளில் ராஜேஷ் தாஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# திஅன்ஸ்டாப்பபிள் ஆக திகழும் டிவிஎஸ் அப்பாச்சி ஆர்டிஆர் 160 இருசக்கர வாகனப் பிரிவில் கம்பீரமான புத்தம் புதிய கருப்பு நிற பதிப்பு தமிழ்நாட்டில் அறிமுகம்



சென்னை, 24 மே 2024: டி.வி.எஸ் மோட்டார் நிறுவனம் (டி.வி.எஸ்.எம்), இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனப் பிரிவில் உலகளாவிய வாகனத் தயாரிப்பு நிறுவனமாக முன்னணி வகிக்கும் இந்நிறுவனம், டி.வி.எஸ் அப்பாச்சி 160 சீரிஸ் மோட்டார்சைக்கிள்களின் புத்தம் புதிய கருப்பு நிற பதிப்பான 'ஏ ப்ளேஸ் ஆஃப் பிளாக்' டார்க் எடிஷன் 'இருசக்கர வாகனத்தை இன்று தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி இருக்கிறது. அப்பாச்சி ஆர் டி ஆர் 160 மற்றும் ஆர் டி ஆர் 160 4வி என்று இவ்வாகனத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. அப்பாச்சி ஆர் டி ஆர் 160 4வி இருசக்கர வாகனமானது 17.6 பி எஸ் @ 9250 என அபாரமான ஆற்றலை வெளிப்படுத்தும் இந்தியாவின் மிகவும் சக்திவாய்ந்த 160சி சி ஆயில் கூல்ட் மோட்டார்சைக்கிள் ஆக திகழ்கிறது. இந்த இரண்டு மோட்டார்சைக்கிள்களும் மூன்று சவாரி முறைகள், டிஜிட்டல் எல்சிடி கிளஸ்டர், எல்இடி ஹெட்லேம்ப் மற்றும் டெயில்லாம்ப் & ஜிடிடி உள்ளிட்ட அம்சங்களுடன் இவ்வாகனப் பிரிவிலேயே மிகச் சிறந்த செயல்திறனுடன் அறிமுகமாகி இருக்கின்றன. மேலும் இவ்வாகனப் பிரிவிலேயே முதல் முறையாக இன்ஜின் மற்றும் ஏபிஎஸ் மோட் ஆகிய இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு, ஸ்போர்ட், அர்பன், ரெயின் என மூன்று முறைகளான பயண அனுபவத்தை அளிக்கின்றன. இந்த மூன்று முறைகள், ஸ்போர்ட் அனுபவத்தை அளிக்கும் வேகமான பயணத்திற்கும், நகர்ப்புற பரபரப்பான பயணத்திற்கும், மழை நேர பாதுகாப்பான பயணத்திற்கும் ஏற்ற வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

60-க்கும் மேற்பட்ட நாடுகளில் மிக வலுவான செயல்பாடுகளுடன், டி வி எஸ் அப்பாச்சி உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஸ்போர்ட்ஸ் மோட்டார்சைக்கிள் ப்ராண்டாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. டிவிஎஸ் நிறுவனத்தின் ரேசிங் டி என் ஏ - வினால் ஈர்க்கப்பட்டு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த வாகன வரிசையானது அதன் அபாரமான செயல்திறன், தனித்துவமான வடிவமைப்பு, அசத்தலான தொழில்நுட்பம் ஆகியவற்றுடன் அதில் பயணிப்பவர்களுக்கு சௌகரியமான பயண அனுபவம், பாதுகாப்பு, மேம்பட்ட வசதியை அளிப்பதை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'ட்ராக் டு ரோட்' தத்துவத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டு இருக்கும், டி வி எஸ் அப்பாச்சி சீரிஸ் சாகச உணர்வை அளிக்கும் பந்தயத்தை வெகுஜன மக்களும் உணரும் வகையிலான அனுபவத்தை கிடைக்கச் செய்திருக்கிறது. இதனால் ஒரு தயாரிப்பாக மட்டுமில்லாமல் மக்களிடையே பெரும் ஆர்வத்தை உருவாக்கியிருக்கும் ஒரு உத்வேகமான மோட்டர் சைக்கிள் ப்ராண்ட் ஆக மிகப்பெரும் வளர்ச்சி கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் ப்ரீமியம் பிரிவின் வணிகத் தலைவர் திரு. விமல் சும்ப்லி இந்த அறிவிப்பு குறித்து பேசுகையில், "நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பந்தயப் பாரம்பரியத்தில் வேரூன்றியிருக்கும் டிவிஎஸ் அப்பாச்சி வரிசை இருசக்கர வாகனங்கள், 5.5 மில்லியனுக்கும் அதிகமான இருசக்கர வாகன ஆர்வலர்களைக் கொண்டிருக்கும் உலகளாவிய ஒரு மாபெரும் சமூகமாக உருவாகியுள்ளது. மேலும், உலகளவில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் ப்ரீமியம் மோட்டார் சைக்கிள் ப்ராண்ட்களில் ஒன்றாகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. டிவிஎஸ் அப்பாச்சியின் அபாரமான தொடர் செயல்திறனை வெளிப்படுத்தும் வகையில், டி வி எஸ் அப்பாச்சி சீரிஸ் அதிநவீன தொழில்நுட்பத்திற்கு மிகச்சரியான சான்றாக திகழ்கிறது. இப்போது, டிவிஎஸ் அப்பாச்சி ஆர்டிஆர் 160 வரிசையானது, கம்பீரமான, தோற்றத்தின் உத்வேகத்துடன் பார்த்த நொடியில் கவனத்தை ஈர்க்கும் புத்தம் புதிய பிளாக் எடிஷனுடன் களமிறங்கி உள்ளது.'' என்றார்.

அப்பாச்சி ஆர் டி ஆர் 160 4வி வாகனமானது, கம்பீரத்துடன் அழகியலான தோற்றத்தை அளிக்கும் பளபளப்பான கருப்பு நிறம் பெற்று, முற்றிலும் புதிய அவதாரத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளதால், மற்ற இருசக்கர வாகனங்களிலிருந்து தனித்து தெரியும் வகையில் பயம் அறியாத, யாராலும் அவ்வளவு சுலபத்தில் தடுத்து நிறுத்த முடியாத ஒரு உத்வேகத்தின் அசல் தயாரிப்பாக திகழ்கிறது. பெட்ரோல் டேங்கின் மீது பதிக்கப்பட்ட கருப்பு நிற டிவிஎஸ் லோகோவுடனான அதிக ஆடம்பரமில்லாத, அழகான குறைந்தளவிலான க்ராஃபிக்ஸ், கருமை நிறத்திலான எக்ஸாஸ்ட் இவை இந்த வாகனத்தின் அழகியல் கவர்ச்சியை மேலும் மேம்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

# பிரபல மருத்துவர் டாக்டர் யு.பி. சீனிவாசன் உருவாக்கியுள்ள 'ஜண்ட மட்டான்' இசை ஆல்பம் வெளியீடு



சென்னை, 24 மே 2024: சென்னையின் பிரபல இரைப்பை மற்றும் குடலியல் மருத்துவரும் (சர்ஜிக்கல் கேஸ்ட்ரோ என்ட்ராலஜிஸ்ட்) ரோபாட்டிக் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் யு.பி. சீனிவாசன் 'ஜண்ட மட்டான்' எனும் இசை ஆல்பத்தை உருவாக்கியுள்ளார். இந்த ஆல்பத்தை பார்த்து பாராட்டி அதன் உரிமையை முன்னணி இசை நிறுவனமான சரிகம வாங்கி உள்ள நிலையில், சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இயக்குநர் சிம்புதேவன், பாடகர் மனோ, தயாரிப்பாளர் பி எல் தேனப்பன், இயக்குநர் மந்திரமூர்த்தி, ஒளிப்பதிவாளர் கோபி ஜெகதீஸ்வரன், நடன இயக்குநர்கள் ஸ்ரீதர் மற்றும் கந்தாஸ், நடிகர் மகேந்திரன் மற்றும் கே பி ஒய் சரத் உள்ளிட்டோர் விருந்தினர்களாக கலந்து கொள்ள 'ஜண்ட மட்டான்' வெளியானது. பல்வேறு துறைகளை சார்ந்த முன்னணியினர் இதில் பங்கேற்றனர். மருத்துவத்துறையில் பாரீஸில் தனிப் பயிற்சி பெற்றுள்ள டாக்டர் சீனிவாசன், அடிப்படையில் கலைத்துறையிலும் ஆர்வம் உள்ளவர். முக்கியமாக பாடல், இசையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இதன் காரணமாக தனது பணிகளுக்கு நடுவே இந்த ஆல்பத்தை உருவாக்கியுள்ளார்.

இதன் பின்னணி சுவாரசியமானது. ஆரம்பத்தில் டாக்டர் யூ.பி.எஸ் ஒரு சிறுகதை எழுதியுள்ளார். அது நாகர்கோயில் வட்டார வழக்கில் கூறப்படும் 'நள்ளிரவு பேய்களின் ஆட்டத்தை' பற்றிய கதை ஆகும். பலராலும் பாராட்டப்பட அக்கதையையே ஒரு குறும்படமாக எடுக்கலாம் என யோசிக்க உடனே நண்பர்களோடு சேர்ந்து களம் இறங்கியுள்ளார்.

இயக்குனர் ஆரிஷ் இக்குறும்படத்தை இயக்கியுள்ளார். அப்போது இதில் வருகிற பேய்களின் ஆட்டத்திற்கு ஒரு பாடல் தேவைப்பட, அதை மேலோட்டமாக எடுத்து விடாமல் தனி ஆல்பமாக எடுப்போம், இசையின் ஒரு பகுதியை குறும்படத்தில் வைத்துக் கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளனர். டாக்டர் யூ.பி.எஸ் நாகர்கோயில் வட்டார வழக்கை நன்கு அறிந்தவர் என்பதால் அவரே 'ஜண்ட மட்டான்' என்ற இதற்கான ஒரு பாடலை எழுதிட, இசையமைப்பாளர்கள் எச்.ஹூமர் எழிலன், எச்.சாஜஹான் ஆகியோர் இந்த ஆல்பத்திற்கு இசையமைத்திட, மாஸ்டர் சுரேஷ் சித் நடனம் அமைத்திட, அதையும் இயக்கநர் ஆரிஷே இயக்கியுள்ளார். பெரும் பொருட்செலவில் உருவான இந்த ஆல்பத்தை பார்த்த 'சரிகம' அதை வெளியிடுகிறது.

தனது ஆபரேஷன் பணிகளுக்கு நடுவே இந்த ஆல்பம் பணி பற்றி டாக்டர் யூ.பி.எஸ் பேசுகையில், "நான் அடிப்படையில் ஒரு டாக்டர். கலையில் சின்ன ஆர்வம் உண்டு, அவ்வளவு தான். ஒரு சிறுகதையாக தொடங்கியது இப்படி குறும்படமாக, ஆல்பமாக உருவாகும் என நானே எதிர்பார்க்கவில்லை. சிறுவயதில் என் பாட்டி சொன்ன கதையின் விரிவாக்கம் தான் இது. நண்பர்களின் உதவியோடு தான் இதை தயாரித்து உள்ளேன். ஆல்பத்திற்கான பாடல் வரிகளை கூட என்னை வற்புறுத்தி தான் எழுத வைத்தனர். பாட்டி கதையில் சில சமூக கருத்துகளையும் இணைத்து பாடல் வரிகளை அமைத்துள்ளோம். இதில் நிறைய கிராபிக்ஸ் வேலைகளை பார்த்தது எனக்கு சினிமா பற்றிய புது அனுபவமாக இருந்தது. இப்போது ஆல்பமாக பார்த்துவிட்டு எல்லோரும் பாராட்டும் போது மனநிறைவாக, மகிழ்ச்சியாக உள்ளது. இது தரும் உற்சாகம் என்னை இன்னும் இத்துறையில் பயணிக்க வைக்கும் என நம்புகிறேன்," என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சவூதி அரேபியாவிற்கான இந்திய தூதர் உள்ளூர் அதிகாரிகளுடன் பரஸ்பர நலன்கள் குறித்து விவாதித்தார்





சென்னை, 24 மே 2024: சவுதி அரேபியாவுக்கான இந்திய தூதர் டாக்டர் சுஹைல் அஜாஸ் கான், திங்களன்று 'சவூதி நோ கோட் இன்னோவேஷன்' உச்சி மாநாட்டில் பங்கேற்று, இந்தியாவில் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இந்தியா-சவுதி ஒத்துழைப்பு குறித்து பேசினார்.

டெக் ஃபோர்ஜ் ஏற்பாடு செய்த உச்சிமாநாட்டில் பங்கேற்கும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களின் நிர்வாகத்தையும் தூதுவர் சந்தித்து, தொழில்நுட்பத் துறையில் இந்தியாவுக்கும் வளைகுடா நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தவும் சிறந்த ஒருங்கிணைப்பை உருவாக்கவும் யோசனைகளைப் பகிர்ந்துகொண்டார்.

உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன், கான் சவுதி அரேபியாவின் நஜ்ரான் பகுதிக்கு விஜயம் செய்தார், அங்கு அவர் உள்ளூர் நிர்வாக அதிகாரிகளை சந்தித்தார். இதன் போது இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த மற்ற விஷயங்கள் குறித்து விவாதித்தனர். இந்தியாவிற்கும் நஜ்ரானுக்கும் இடையிலான வலுவான வரலாற்று உறவுகள், பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு இந்திய சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற பிரச்சினைகள் குறித்து இங்கு விவாதித்தனர்.

நஜ்ரான் பிராந்தியத்தின் ஆளுநரான இளவரசர் ஜலாவி பின் அப்துல்அஜிஸ் பின் முசைத், இந்தியத் தூதரை ஞாயிற்றுக்கிழமை அவரது அலுவலகத்தில் அன்புடன் வரவேற்றார். வரவேற்பு நிகழ்வின் போது இருவருக்குமிடையில் சிநேகபூர்வ உரையாடல் இடம்பெற்றதுடன் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ரியாத்தில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் சமூக ஊடக தளத்தில் இந்தியாவுடன் வர்த்தக வாய்ப்புகள் குறித்து விவாதித்ததாக எழுதியது, குறிப்பாக கிரானைட், தாமிரம், துத்தநாகம் மற்றும் தங்கம் போன்ற கனிமங்கள் உட்பட சுரங்கத் துறையில்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின்படி, தூதுவர் நஜ்ரான் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பல்கலைக்கழகத்தின் கல்வி விவகாரங்களுக்கான துணை டீன் டாக்டர் பந்தர் அல்-ஷெஹ்ரியையும் சந்தித்தார். பல்கலைக்கழக கல்லூரிகளில் இந்திய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகள் குறித்து தூதர் விரிவான கலந்துரையாடலை நடத்தினார். இங்கு இந்திய மாணவர்களுடன் கான் உரையாடினார். நஜ்ரானுக்கான தனது விஜயத்தின் போது, இந்திய சமூகத்தின் பிரதிநிதிகளுடன் தூதுவர் உரையாடி அவர்களின் அனுபவங்களையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

# சாம்சங் 'நாளைக்கான தீர்வு' பள்ளி மாணவர்கள் மத்தியில் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன்களை வளர்ப்பதற்கான முதல் வடிவமைப்புச் சிந்தனைப் பயிலரங்கை நடத்துகிறது

கோயம்புத்தூர், 24 மே 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் அதன் முதல் வடிவமைப்பு சிந்தனை மற்றும் பயிற்சி பயிலரங்கை அறிமுகப்படுத்தியுள்ளது. சாம்சங்கின் 'நாளைக்கான தீர்வு' திட்டத்தின் ஒரு பகுதியான இந்த தனித்துவமான முன்முயற்சி, மனிதனை மையமாகக் கொண்ட வடிவமைப்பு சிந்தனை கட்டமைப்பின் மூலம் மாணவர்களிடையே சிக்கலைத் தீர்ப்பது, விமர்சன சிந்தனை, ஆய்வு மற்றும் படைப்பாற்றல் போன்ற அத்தியாவசிய திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. தேசிய கல்வி மற்றும் கண்டுபிடிப்பு போட்டியானது அடுத்த தலைமுறையினரிடையே புதுமை கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த ஒரு நாள் பயிலரங்கு, மாணவர்களின் வடிவமைப்பு சிந்தனையைப் பாராட்டவும், நிஜ உலகப் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கருத்தாக்கப்பட்டுள்ளது. கல்விப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மனிதனை மையமாகக் கொண்ட வடிவமைப்பு சிந்தனை என்பது சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த நடைமுறையாகும். வடிவமைப்பு உலகில் உள்ள செயல்முறைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி, மனிதனை மையமாகக் கொண்ட வடிவமைப்பு கட்டமைப்பானது, பயனர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பரிகாரம், வரையறை, யோசனை, முன்மாதிரி மற்றும் சோதனை ஆகியவற்றின் மீது ஈர்க்கிறது.

சாம்சங்கின் 'நாளைக்கான தீர்வு' என்பது, அடுத்த தலைமுறைக்கு அதிகாரமளிப்பதற்கும், நாட்டில் புதுமைக்கான சூழலை உருவாக்குவதற்கும் எங்கள் பார்வையின் ஒரு பகுதியாகும். அவர்கள் புதுமையின் கொடியை ஏந்தியவர்கள் என்றும், சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு வளர்ப்பு தேவை என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த ஆண்டு 10 பள்ளிகளில் ஒரு முன்னோடித்துவ வடிவமைப்புச் சிந்தனை பயிலரங்குகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, இது இளம் மாணவர்களை திட்டங்களை செயல்படுத்த ஊக்குவிக்கும், இதில் சிக்கல் தீர்க்கும், ஒத்துழைப்பு மற்றும் ஆக்கப்பூர்வமான சிந்தனை ஆகியவை அடங்கும். இந்த ஆஃப்லைன் அமர்வுகள் மூலம், பள்ளி மாணவர்கள் அடிப்படைகளை கேள்வி கேட்கவும், நிஜ உலக பிரச்சினைகளை அடையாளம் காணவும் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை முன்மொழியவும் ஒரு தனித்துவமான வாய்ப்பைப் பெறுவார்கள்" என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் கார்ப்பரேட் துணைத் தலைவர் எஸ் பி சுன் அவர்கள் கூறினார்.

# முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்ட கேரள அரசு திட்டம் உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி சட்ட நடவடிக்கை எடுக்க தி.மு.க. அரசுக்கு எடப்பாடி வலியுறுத்தல்





சென்னை, 24 மே 2024: உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக, முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்ட அனுமதி கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ள கேரள அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கும்பகர்ண தூக்கத்திலிருந்து விழித்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. அரசை அவர் வலியுறுத்தியுள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக முல்லைப் பெரியாறு அணையை முழுமையாக இடிக்க, மத்திய அரசுக்கு கேரள அரசு கடிதம் எழுதியுள்ளதற்கு, எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா முதலமைச்சராக இருந்தபோது, சட்டப் போராட்டம் நடத்தி அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அணையில் முழுமையான ஆய்வுகள் மேற்கொண்டபின், முதலில் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் 27.2.2006 அன்று (அம்மாவின் ஆட்சி) தீர்ப்பளித்தது. மேலும், அணையை பலப்படுத்திய பிறகு 152 அடி வரை தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பிலே குறிப்பிட்டிருந்தது. ஆனால், 2006 முதல் 2011 வரை ஆட்சியில் இருந்த அப்போதைய மைனாரிட்டி தி.மு.க. அரசு முல்லை பெரியாறு அணையை பலப்படுத்தி, தண்ணீர் தேக்கி வைக்கும் அளவை 152 அடியாக உயர்த்த எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

மீண்டும், 2011-ல் அம்மா தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, கேரள அரசின் புதிய சட்டங்களை எதிர்த்து, மீண்டும் உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, 7.5.2014 அன்று அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், கேரள அரசு எவ்வித குறுக்கீடும் செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது என்ற தீர்ப்பைப் பெற்றார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், அம்மாவின் அரசில் பேபி அணை மற்றும் அணைப் பகுதிகளை பலப்படுத்துவதற்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பக்கட்டப் பணிகள் துவக்கப்பட்டன. ஆனால், கட்டுமானப் பொருட்கள் கொண்டு செல்ல கேரள அரசு அனுமதி வழங்கவில்லை. மேலும், பேபி அணையை பலப்படுத்தும் கருவிகளைப் பொருத்துவதற்கு 23 மரங்களை வெட்ட மத்திய மற்றும் கேரள வனத் துறைகளிடமிருந்து அனுமதி கோரப்பட்டது. வனத் துறையின் அனுமதியைப் பெற கேரள அரசு தடையாக இருந்தது. இதனால் பணிகள் முழுமையாக முடிவடையவில்லை. இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் இன்றுவரை நிலுவையில் உள்ளது.

தொடர்ந்து நான், முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, பிரதமரிடம் நேரடியாகவும், மத்திய நீர்வளக் குழுமம், மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, கேரள அரசு, கேரள வனத் துறை என்று அனைவருக்கும் பேபி அணையை பலப்படுத்த, தமிழக பொதுப்பணித் துறைக்கு அனுமதி வழங்குமாறு கடிதங்கள் மூலம் வலியுறுத்தினேன். ஆனால், கேரள வனத் துறையின் அனுமதி வழங்கப்படாததால், பேபி அணையை பலப்படுத்தும் பணிகளை தொடர முடியவில்லை.

இந்நிலையில், மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 2021-ல் விடியா தி.மு.க. அரசு பொறுப்பேற்றது. 2021 அக்டோபர் மாதம் பருவ மழையின் போது பெய்த கன மழையால் நீர்நிலைகள் நிரம்பி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் சுமார் 138.85 அடியாக இருக்கும்போதே, கேரள அரசின் அமைச்சர்கள் தன்னிச்சையாக அணையின் ஷட்டர்களைத் திறந்து நீரை வெளியேற்றினர்.

தமிழக மக்களை வஞ்சிக்கும் வகையில், தமிழக அரசின் அனுமதியின்றி கடந்த 29.10.2021 அன்று கேரள அமைச்சர்கள் முன்னிலையில், முல்லைப் பெரியாறு அணையை திறந்துவிட்டது தவறு என்று நான் அறிக்கைகள் மற்றும் பேட்டிகள் வாயிலாக அண்ணா தி.மு.க.வின் சார்பில் கடும் எதிர்ப்பை தெரிவித்தேன். மேலும், 9.11.2021 அன்று விவசாயிகள் நடத்திய போராட்டத்தில், அண்ணா தி.மு.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணையில் உள்ள பேபி அணைக்கு கீழே இருக்கும் 15 மரங்களை வெட்டுவதற்கு கேரள வனத்துறை 2021 அக்டோபர் மாதம் அனுமதி வழங்கியதாகவும், அதற்கு தமிழ் நாடு முதலமைச்சர் ஸ்டாலின், கேரள முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதாக தமிழ் நாடு அரசு பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டது. மேலும், அதில் அணையை வலுப்படுத்த கட்டுமானப் பொருட்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு வசதியாக பெரியாறு அணைக்கு செல்லும் பாதையை பலப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த அறிக்கை வெளிவந்த உடனேயே கேரள முதலமைச்சர் அதிர்ச்சியடைந்ததாகவும், மரம் வெட்ட யாரும் உத்தரவிடவில்லை என்றும், தமிழக அரசுக்கு அனுமதி அளித்து கடிதம் எழுதியிருப்பின், அந்த வனத் துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கேரள அரசு தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவித்தன. மேலும், பேபி அணையில் மரங்களை வெட்ட தமிழக அரசுக்கு அளிக்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை ரத்து செய்வதாக கேரள வனத் துறை அமைச்சர் அறிவித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைப் பெரியாறு பிரச்சனையில் விடியா திமுக அரசின் செயலற்ற தன்மையால் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளும், குடிநீருக்காக நம்பி உள்ள பல மாவட்ட மக்களும் இன்றைக்கு வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இனியாவது இந்த விடியா திமுக அரசு, கூட்டணிக் கட்சி என்று பாராமல், கும்பகர்ண தூக்கத்தில் இருந்து விழித்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சட்ட நடவடிக்கை எடுத்து கேரள அரசின் விஷமத்தனமான நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும்; தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டவும், முல்லைப் பெரியாறு அணையில், உச்சநீதிமன்ற ஆணையின்படி பேபி அணையை பலப்படுத்தி 152 அடி வரை தண்ணீரைத் தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடியா திமுக அரசின் முதலமைச்சரை வலியுறுத்துகிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# சர்வதேச குடும்பங்கள் தினம்: சென்னையில் உள்ள 18-30 வயதுடையவர்களே வீட்டின் சிற்றுண்டித் தேர்வுகளைத் தேர்ந்தெடுக்கின்றனர் என கோட்ரேஜ் யம்மீஸ் ஆய்வில் தெரியவந்துள்ளது

சென்னை, 24 மே 2024: சர்வதேச குடும்ப தினம் ஆண்டுதோறும் மே 15 அன்று கொண்டாடப்படுகிறது. இந்தியாவில், குடும்பங்களை ஒன்றிணைக்கும் முக்கிய தருணங்களில் ஒன்று தினசரி ' தேநீர் நேரம் மற்றும் சிற்றுண்டி.' இந்த பாரம்பரியம் குழந்தைகள் முதல் மூத்த குடிமக்கள் வரை அனைத்து வயதுக் குழுவினரும் பங்கேற்கும் ஒன்றாகும் மற்றும் இது குடும்பங்களுக்கு சரியான பிணைப்பு நேரமாக அமைகிறது. 'எஸ் டி டி ஈ எம் - பாதுகாப்பு, தொழில்நுட்பம், சுவை, எளிமை & மனநிலை மேம்பாடு என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஒரு சுவாரஸ்யமான ஆய்வான - கோத்ரெஜ் டைசன் ஃபுட்ஸ் லிமிடெட்-ன் சமையல் தயாரிப்புகளின் பிராண்டான கோத்ரெஜ் யம்மிஸின் இந்தியா ஸ்நாக்கிங் ரிப்போர்ட் (தொகுதி மி), குடும்பங்களில் சந்தைகளில் கிடைக்கும் பலவிதமான விருப்பங்களுக்கு மத்தியில் எந்த வயதினர் பொதுவாக குடும்பங்களில் உட்கொள்ளும் தின்பண்டங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதை ஆராய்ந்தது. குடும்ப சிற்றுண்டி இயக்கவியல் பற்றிய இந்த நுண்ணறிவு, குடும்பங்களை ஒன்றிணைப்பதில் உணவு மற்றும் தின்பண்டங்களின் பங்கை எடுத்துக்காட்டி, குடும்பங்களின் சர்வதேச தினத்தை நாம் கொண்டாடும் வேளையில் குறிப்பிட்ட நுண்ணறிவினை வழங்குகிறது.

அறிக்கையின்படி, 18-30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் (ஆண்-பெண் இருவரும்) குடும்பத்தின் சிற்றுண்டித் தேர்வில் 34%, குழந்தைகள் 27%, பெரியவர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் முறையே 22% மற்றும் 12% தீர்மானிக்கிறார்கள். பிராந்தியங்கள் முழுவதும் ஒப்பிடும் போது, கோத்ரெஜ் யம்மிஸ் அறிக்கை, கிழக்கில் உள்ள இளைஞர்கள் சிற்றுண்டித் தேர்வுகளில் அதிக செல்வாக்கு பெற்றுள்ளதையும் 40% மதிப்பெண்களைப் பெற்றுள்ளதையும் வெளிப்படுத்தியுள்ளது. 34% மதிப்பெண்களுடன் மேற்கத்திய இளைஞர்கள் நெருக்கமாகப் பின்தொடர்கின்றனர். இதற்கிடையில், இந்தியாவின் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள இளைஞர்கள் முறையே 33% மற்றும் 32% உடன் சிற்றுண்டித் தேர்வுகளில் ஒப்பிடக்கூடிய அளவிலான செல்வாக்கை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த நுண்ணறிவு மற்றும் அறிக்கை பற்றி பேசிய யம்மிஸ் கோத்ரேஜ் டைசன் புட்ஸ் ஏவிபி மோஹித் மர்வாஹா அவர்கள், “கோத்ரேஜ் யம்மிஸ், நுகர்வோர்களை ஆழமாகப் புரிந்துகொண்டு, உறைநிலை ரெடி-டு-குக் பிரிவில் சமையல் முறையை மறுவரையறை செய்யும் வகையிலான பிரிவில் சிந்தனைத் தலைவராக இருப்பதில் பெருமை கொள்கிறது. எங்கள் இந்திய ஸ்நாக்கிங் அறிக்கை இந்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும், சிற்றுண்டி போக்குகள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகிறது மற்றும் குடும்ப சிற்றுண்டி தேர்வுகளை வடிவமைப்பதில் இளைஞர்களின் அதிகரித்து வரும் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது. 18-30 வயதுடைய இளைஞர்கள் இப்போது சிற்றுண்டி விருப்பங்களைத் தீர்மானிப்பதில் முன்னணியில் இருப்பதால், பாரம்பரிய குடும்ப இயக்கவியலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பார்ப்பது கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. இந்த போக்கு வளர்ந்து வரும் நுகர்வோர் தளம் மற்றும் மலிவு, வசதியான மற்றும் எளிதாக செய்யக்கூடிய விருப்பங்களுக்கான வளர்ந்து வரும் தேவையை பிரதிபலிக்கிறது, மேலும் புதிய சிற்றுண்டி வகைகளை ஆராய இளைஞர்களை ஊக்குவிக்கிறது" என்று கூறினார்.

அறிக்கையில் வெளிப்பட்டுள்ள ஒரு சுவாரஸ்யமான போக்கு, சிற்றுண்டி முடிவெடுப்பதில் குழந்தைகளின் வளர்ந்து வரும் பங்கு, குறிப்பாக ஹைதராபாத்தில் அவர்கள் 33% தேர்வுகளைக் கொண்டுள்ளனர். இந்தியாவின் முக்கிய நகரங்கள் முழுவதும் இளைஞர்கள் தலைமையிலான சிற்றுண்டி முடிவுகள் குறித்த நகர வாரியான தரவுகளையும் இந்த அறிக்கை வழங்குகிறது. கொல்கத்தா 40% இளைஞர்கள் குடும்ப சிற்றுண்டித் தேர்வுகளை பாதிக்கிறது, லக்னோ 37%, அகமதாபாத் 36%, பெங்களூர் 35% மற்றும் மும்பை 34%. டெல்லி மற்றும் ஜெய்ப்பூர் 32%, புனே மற்றும் சென்னை ஆகியவை முறையே 31% மற்றும் 30% உடன் நெருக்கமாக உள்ளன.

# போன்பே தனது சேவைகளை இலங்கையில் அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 24 மே 2024: டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை வலுப்படுத்தியதன் காரணமாக இந்தியா புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டுள்ளது. இந்தியாவின் டிஜிட்டல் கட்டண முறையான யூ பி ஐ ஆனது இந்தியாவில் சாதகமான மாற்றங்களைக் கொண்டுவருவதோடு, மற்ற நாடுகளையும் கூட்டாளிகளாக இணைக்கும் புதிய பொறுப்பை வகிக்கிறது. இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் பணப்பை மற்றும் பணம் செலுத்தும் செயலியான ‘போன்பே’ இலங்கையில் தனது சேவைகளை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பணம் செலுத்துவது மிகவும் எளிதாக இருக்கும், மேலும் இந்திய சுற்றுலா பயணிகள் பணம் செலுத்துவதற்காக அங்கும் இங்கும் அலைய வேண்டியதில்லை. இலங்கையில் யூபிஐ (யூனிபைட் பேமெண்ட் இண்டர்பேஸ்) ஐப் பயன்படுத்தி, நிறுவனத்தின் பயனர்கள் பணம் செலுத்தும் வசதியைப் பெற்றிருப்பதாக, போன்பே, லன்காபே உடனான தனது கூட்டாண்மையை புதன்கிழமை அறிவித்தது. இதனை முன்னிட்டு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் கலந்துகொண்டார். டிஜிட்டல் கட்டண முறையின் எளிமை இந்தியாவில் இருந்து சுற்றுலாவை மேலும் மேம்படுத்தும் என்று அவர் கூறினார். இந்திய உயர் ஸ்தானிகராலயம் ‘எக்ஸ்’ இல் எழுதியது, “பிண்டெக் இணைப்பில் புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளன! போன்பே யூ பி ஐ கொடுப்பனவுகள் இலங்கையில் நேரலையில் உள்ளன. உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் எஸ்இ பி எஸ் எல் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் தொடக்க நிகழ்ச்சியை சிறப்பித்தனர். யூ பி ஐ சேவைகளை ஊக்குவிப்பதன் மூலம், இந்த அறிமுகமானது இலங்கைக்கான இந்திய சுற்றுலாப் பயணிகளின் வசதியை மேலும் வலுப்படுத்தும்.

“பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டாக 2024 பெப்ரவரி 12 அன்று லங்காபேயுடன் இணைந்து இலங்கையில் யூ பி ஐ சேவைகளை ஆரம்பித்தார்” என்று இந்திய தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இலங்கையில் 240 மில்லியனுக்கும் அதிகமான இலங்கை நாணயத்தின் பெறுமதியான 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வெளியீடு தற்போதுள்ள டிஜிட்டல் ஃபின்டெக் இணைப்பை மேலும் மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அரசு வெளிநாடுகளில் இந்திய கட்டண முறையை விரிவுபடுத்த முயற்சிக்கிறது, இதில் இந்திய தூதரகங்களின் பங்கு முக்கியமானது. ரஷ்யா, பிரான்ஸ், மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், கத்தார், ஓமன், மொரீஷியஸ், நேபாளம் மற்றும் பூட்டான் உள்ளிட்ட பல நாடுகளுக்கு யூ பி ஐ சென்றடைந்துள்ளது, மேலும் பல நாடுகளிலும் சேவைகளை தொடங்க அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

# கோமல் சர்மாவுக்கு கோல்டன் விசா வழங்கி கவுரவித்த ஐக்கிய அரபு அமீரக அரசு




சென்னை, 24 மே 2024: தமிழில் எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கிய சட்டப்படி குற்றம் என்கிற படத்தில் அறிமுகமானவர நடிகை கோமல் சர்மா, அதன்பிறகு வைகை எக்ஸ்பிரஸ், ஷாட் பூட் த்ரீ, பப்ளிக் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். மலையாளத்தில் மோகன்லால் முதன்முறையாக இயக்கி நடித்து விரைவில் வெளியாகவுள்ள ‘பரோஸ்’ என்கிற படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது ஐக்கிய அரபு அமீரக அரசு கோமல் சர்மாவுக்கு கோல்டன் விசா வழங்கி கவுரவித்துள்ளது. பொழுதுபோக்கு துறையில் இவரது திறமை, அர்ப்பணிப்பு, பங்களிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த கோல்டன் விசா கோமல் சர்மாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. துபாயில் நடைபெற்ற நிகழ்வில் இந்த கோல்டன் விசா வழங்கும் திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் எக் டிஜிட்டல் நிறுவனத்தின் சிஇஓ திரு. இக்பால் மார்கோனி இந்த கோல்டன் விசாவை கோமல் சர்மாவிடம் வழங்கினார். தமிழ் திரையுலகில் விஜய் சேதுபதி, அருண் விஜய், பார்த்திபன், திரிஷா, அமலாபால், நஸ்ரியா, ராய்லட்சுமி உள்ளிட்ட வெகு சில நட்சத்திரங்கள் மட்டுமே இந்த கோல்டன் விசாவை பெற்றுள்ள நிலையில் தற்போது நடிகை கோமல் சர்மாவுக்கு இந்த கோல்டன் விசா வழங்கப்பட்டுள்ளது. கோல்டன் விசா பெற்றது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள கோமல் சர்மா கூறுகையில், “இப்படி ஒரு கவுரவம் கிடைத்ததில் மிகப்பெரிய மகிழ்ச்சி. தமிழ் திரையுலகில் வெகு சில நட்சத்திரங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள இந்த இந்த கோல்டன் விசாவை தற்போது எனக்கு வழங்கியதற்காக ஐக்கிய அரபு அமீரக அரசுக்கு மிகப்பெரிய நன்றி. தமிழ்நாட்டை போல இனி துபாயும் எனது இன்னொரு வீடு என்று பெருமையாக சொல்லலாம். இது போன்ற கவுரவத்தால் எனது பொறுப்புகள் இன்னும் அதிகமாகவதாக உணர்கிறேன். இது இன்னும் பல நல்ல விஷயங்களை செய்வதற்கு உந்து சக்தியாக அமையும். இதன் மூலம் மற்றவர்களுக்கு என்ன நல்லது செய்ய முடியும் என முயற்சிப்பேன்” என்று கூறியுள்ளார்.. துபாய், அபுதாபி, ஷார்ஜா உள்ளிட்ட ஏழு நகரங்களை ஒன்றிணைத்துள்ள ஐக்கிய அரபு அமீரக அரசு, கடந்த 2019ஆம் ஆண்டில் கோல்டன் விசா வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தின. இதன்படி பத்து வருட காலம் இந்த விசா செல்லுபடியாகும்.. அதன்பின் தானாகவே அடுத்த பத்து வருடத்திற்கு அவை புதுப்பிக்கப்படும்.. இப்படிப்பட்ட ஒரு சிறப்பு சலுகையை ஒவ்வொரு குறிப்பிட்ட துறையில் சாதித்த சில மனிதர்களுக்கு மட்டுமே வழங்கி வருகின்றது ஐக்கிய அரபு அமீரக அரசு.

# இயக்குநர் கோபிநாத் நாராயணமூர்த்தியின் புதிய திரைப்பட நிறுவனம் மை கைண்டா ஃபிலிம்ஸ் கோலாகல துவக்கம்




சென்னை, 24 மே 2024: தமிழில் 'தங்க முட்டை' மற்றும் தெலுங்கில் 'பங்காரு குட்டு' என இருமொழிகளில் வெளிவரவிருக்கும் திரைப்படத்தை எழுதி இயக்கி வரும் கோபிநாத் நாராயணமூர்த்தி மை கைண்டா ஃபிலிம்ஸ் என்று புதிய திரைப்பட நிறுவனத்தை தொடங்கியுள்ளார். கோபிநாத் நாராயணமூர்த்தியின் தாயார் கே கோதைநாயகி அவர்களின் பிறந்தநாளான மே 16 (வியாழக்கிழமை) அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மை கைண்டா ஃபிலிம்ஸ் திரைப்பட நிறுவனத்தை கோபிநாத் நாராயணமூர்த்தியின் குருநாதர்களான இயக்குநர்கள் மிலிந்த் ராவ், ஆர் கண்ணன், இயக்குநர்கள் சங்கத்தின் செயலாளர் பேரரசு மற்றும் பிரபல தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோர் தொடங்கி வைத்தனர். புதிய திரைப்பட நிறுவனத்தின் பெயர் பலகையை கோபிநாத் நாராயண மூர்த்தி மற்றும் இணை இயக்குநர் கரிகாலன் பிரபலங்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் மை கைண்டா ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் முதல் படைப்பான 'கோதையின் குரல்' குறும்படம் திரையிடப்பட்டது. படத்தை பார்த்த அனைவரும் அதை மிகவும் பாராட்டினர். தயாரிப்பாளர் கே ராஜன், இயக்குநர் மோகன் ஜி, இயக்குநர் எஸ் ஆர் பிரபாகர், தயாரிப்பாளர் இளஞ்செழியன் கே எம், தயாரிப்பாளர் கோட்டீஸ்வர ராவ் ('தங்க முட்டை' மற்றும் 'பங்காரு குட்டு') உள்ளிட்டோர் படத்தை பெரிதும் பாராட்டினர். இதைத் தொடர்ந்து, 12 வயதே ஆன ஒரு பெண் குழந்தை சமுதாயத்தின் முக்கிய பிரச்சினை ஒன்று குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பது தொடர்பான 'கோதையின் குரல்' குறும்படம் விரைவில் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு அனுப்பப்படுவதோடு முன்னணி ஓடிடி தளம் ஒன்றிலும் ஒளிபரப்பாக உள்ளது. அரசியலமைப்பின் முக்கியமான □ தூண்களில் ஒன்றில் மாற்றத்தை இப்படம் பரிந்துரைக்கிறது. இந்தியாவில் தேர்தல் நடந்து கொண்டிருக்கும் இந்த சமயத்தில் மிக முக்கியமான கருத்து ஒன்றை இப்படம் வலியுறுத்துகிறது. ‘தங்க முட்டை’ படத்தில் நாயகனாக நடிக்கும் தெலுங்கு நடிகர் சம்பூர்ணேஷ் பாபுவுக்கு தமிழில் டப்பிங் பேசும் பிரபல நடிகர் சஞ்சீவ் அரசு அதிகாரியாக இந்த குறும்படத்தில் நடித்துள்ளார். நடிகை நளினி, பாப்பி மாஸ்டர் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தரத்தில் எந்த சமரசமும் இல்லாமல் உருவாகியுள்ள இந்த குறும்படத்திற்காக 'தங்க முட்டை' படக்குழுவினருடன் மீண்டும் இயக்குநர் கோபிநாத் நாராயணமூர்த்தி கைகோர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. பவி கே பவன் ஒளிப்பதிவு செய்ய, ராம் படத்தொகுப்பையும், பிவி பாலாஜி கலை இயக்கத்தையும் கையாண்டுள்ளனர்.

ஒரு பெண் குழந்தையின் வழியாக சொல்லப்பட்டுள்ள இந்த கதை, இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் உள்ளது என்று கூறிய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ஏ பி ஜே அப்துல் கலாமின் லட்சியத்தையும் நினைவூட்டுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களுடன் பணியாற்றிய அனுபவம் பெற்ற தகவல் தொழில்நுட்ப நிபுணரான கோபிநாத் நாராயணமூர்த்தி சினிமா மீதான பற்றால் இயக்குநர் ராஜீவ் மேனனின் மைண்ட்ஸ்கிரீன் திரைக்கதை மற்றும் திரைப்பட இயக்க பயிற்சி மையத்தில் பயின்றவர் ஆவார். இயக்குநர்கள் மிலிந்த் ராவ், ஆர் கண்ணன் மற்றும் பிஜோய் நம்பியார் ஆகியோரிடமும் இவர் பணியாற்றியுள்ளார். பின்னர் இவர் ஒரு திரை எழுத்து நிறுவனத்தை தொடங்கியபோது, இயக்குநர் கௌதம் வாசுதேவ மேனன் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் உருவெடுத்துள்ளார்.